<u>குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான</u>

<u>பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012.</u>

# PUBLIC PROCUREMENT POLICY FOR MICRO AND SMALL ENTERPRISES ORDER 2012.

1. பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 என்றால் என்ன?.

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 கூறுவது யாதெனில்,

> மத்திய அரசின் ஒவ்வொரு அமைச்சகம் / துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் ஆண்டு கொள்முதல் மதிப்பில் குறைந்தபட்சம் 25% குறு மற்றும் சிறு தொழில் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களையோ அல்லது அவை வழங்கும் சேவைகளை கொள்முதல் செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

2. பொது கொள்முதல் கொள்கை உத்தரவு எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?.

இக்கொள்கையானது மார்ச் , 2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டு முதல் இவ்உத்தரவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

3. பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 மூலம் பயன் பெறுபவர்கள் யார்?.

பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 (இக்கொள்கை) யாருக்கு பொருந்தும்?.

(a) உதயம் பதிவு சான்றிதழ் (UDAYAM REGISTRATION CERTIFICATE ) உடைய தொழில் நிறுவனங்கள்

(b) மாவட்ட தொழில் மையத்தில் பதிவு செய்த அல்லது

(c) காதி மற்றும் கிராம (கிராமம் )தொழில் ஆணையத்தில் பதிவு செய்த அல்லது

(d) காதி மற்றும் கிராம (கிராமம் )தொழில் வாரியத்தில் பதிவு செய்த அல்லது

(e) கயிறு வாரியத்தில் பதிவு செய்த அல்லது

(f) தேசிய சிறு தொழில் கழகத்தில் பதிவு செய்த அல்லது

(g) கைவினைப்பொருட்கள் மற்றும் கைத்தறி இயக்குநகரத்தில் பதிவு செய்த அல்லது

(h) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பில் பதிவு செய்த அனைத்து குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு (இக்கொள்கை) பொருந்தும்.

4. பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 OR

எந்த வகையான தொழில்களுக்கு (யாருக்கு) பொருந்தும்?

பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012யானது உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் பொருந்தும்.

5. "பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012" எவ்வகை தொழில் நிறுவனங்களுக்கு பொருந்தும்?.

குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வளர்ச்சி சட்டம் 2006 படி வரையறுக்கப்பட்ட அனைத்து குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பொருந்தும்.

6. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் எவ்வாறு / எதன் அடிப்படையில் வரையறை செய்யப்பட்டுள்ளது?.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், இயந்திரம்,தளவாடங்கள் மீதான முதலீடு மற்றும் தொழில் நிறுவனத்தின் ஆண்டு விற்று முதல் ஆகியவற்றின் அடிப்படையில் வரையறை செய்யபட்டுள்ளது.

அதாவது,

| | குறுந் தொழில் நிறுவனம். | சிறு தொழில் நிறுவனம். | நடுத்தர தொழில் நிறுவனம். |
|---|---|---|---|
| இயந்திரம் மற்றும் தளவாடங்கள் மீதான முதலீடு | 1 கோடி | 5 கோடி | 50 கோடி |

| | | | |
|---|---|---|---|
| தொழில் நிறுவனத்தின் ஆண்டு விற்று முதல் | 5 கோடி | 10 கோடி | 250 கோடி |

( புதிய வரையறை 01-07-2020 முதல் அமுலுக்கு வந்துள்ளது)

7. பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பொருந்துமா?.

பொருந்தாது/ பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பொருந்தாது.

8. பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 வியாபார தொழில் (TRADING) புரிபவர்களுக்கு பொருந்துமா?.

பொருந்தாது, பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில்களுக்கும் (உற்பத்தி சார்ந்த தொழில் மற்றும் சேவை சார்ந்த தொழில்களுக்கும்) மட்டும் பொருந்தும். மேலும் விபரங்களுக்கு இங்கே சொடுக்கவும் (Click Here),

http://www.dcmsme.gov.in/Clarification.pdf

9. ஒரு பொருளின் விநியோகஸ்தர் ( Distributer) /டீலர்ஷிப் Dealership) /ஏஜென்சி(Agency) தொழில்புரிபவர்களுக்கு இக்கொள்கை பொருந்துமா?

பொருந்தாது, மேலும் விபரங்களுக்கு இங்கே சொடுக்கவும் (Click Here),

http://www.dcmsme.gov.in/Clarification.pdf

10. பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012யில் பெண் தொழில்முனைவோருகளை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பு அம்சங்கள் ஏதும் அளிக்கப்பட்டுள்ளதா?

OR

25% அரசு கொள்முதலில் பெண் தொழில்முனைவோர்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்க்கென்று உள் ஒதுக்கீடு ஏதும் அளிக்கப்பட்டுள்ளதா?.

ஆம். ஆண்டு மொத்த கொள்முதல் மதிப்பான 25%யில், 3% மதிப்பிலான பொருட்களை அல்லது சேவைகளை பெண் தொழில் முனைவோர்கள் நடத்தும்

நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டும் என்ற உள் ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது மேலும் விபரங்களுக்கு இங்கே சொடுக்கவும்,

http://www.dcmsme.gov.in/Gazette%20Notification.pdf

11. பட்டியலின / பழங்குடின தொழில்முனைவோருகளை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பு சலுகை அளிக்கப்பட்டுள்ளதா?

OR

25% அரசு கொள்முதலில் பட்டியலின / பழங்குடின தொழில்முனைவோர்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்க்கென்று உள் ஒதுக்கீடு ஏதும் அளிக்கப்பட்டுள்ளதா?.

ஆம். ஆண்டு மொத்த கொள்முதல் மதிப்பான 25%யில், 4% மதிப்பிலான பொருட்களை அல்லது சேவைகளை பட்டியலின / பழங்குடின தொழில் முனைவோர்கள் நடத்தும் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டும் என்ற உள் ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

12. "முன்னுரிமை விலை" கொள்கை இதற்கு பொருந்துமா?.

ஆம் பொருந்தும். 15% "முன்னுரிமை விலை"யின் பயன் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

13. "முன்னுரிமை விலை" கொள்கை என்றால் என்ன?. & எடுத்துக்காட்டுடன் விளக்கவும்?.

"முன்னுரிமை விலை" கொள்கை என்பது, ஒரு ஒப்பந்தப்புள்ளியில் குறு அல்லது சிறு தொழில் நிறுவனங்கள் கோரிய விலையானது L1+15% வரம்பிற்குள் இருக்கும்பட்சத்தில், L 1 பெரு தொழில் நிறுவனங்களாக (குறு மற்றும் சிறு நிறுவனங்களாக அல்லாமல் ) இருப்பின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் குறைந்தபட்சம் 25% மதிப்பிலான பணி "L 1" விலையில் பணிகளை மேற்கொள்வதற்கு குறு அல்லது சிறு தொழில் நிறுவனங்களுக்கு கொடுக்கப்படவேண்டும்.

L 1+15% வரம்பிற்குள் ஒன்றுக்கு மேற்பட்ட குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் வருமாயின் 25% மதிப்பிலான பணியானது ஒப்பந்த புள்ளியில் L 1+15% வரம்பிற்குட்பட்ட குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையின் விகிதாச்சார அடிப்படியில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

எடுத்துக்காட்டு:

(i) ஒப்பந்த பணியின் மதிப்பு: 100.00 கோடி.

(ii) ஒப்பந்த புள்ளியில் பங்கேற்ற நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை : 04.

(iii ) ஒப்பந்த புள்ளியில் பங்கேற்ற பெரு நிறுவனங்களின் எண்ணிக்கை : 1.

(iv ) ஒப்பந்த புள்ளியில் பங்கேற்ற குறு மற்றும் சிறு நிறுவனங்களின் எண்ணிக்கை : 3.

(v ) ஒப்பந்த புள்ளியில் பங்கேற்ற குறு மற்றும் சிறு நிறுவனங்கள் கோரிய விலை :Rs .115/-

(vi ) ஒப்பந்த புள்ளியில் பங்கேற்ற பெரு நிறுவனம் கோரிய விலை :Rs .100/-, எனவே L 1 = 100/-

இப்போது குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் கோரிய விலை Rs.115/- L1+15% வரம்பிற்குள் வருகிறது.

எனவே Rs.115/- விலை கோரிய குறு மற்றும் சிறு தொழில் நிறுவனத்தை L1 விலைக்கு ஒப்பந்த பணி மதிப்பில் குறைந்தபட்சம் 25% சப்ளை செய்வதற்கு வாய்ப்பு கொடுக்கப்படவேண்டும்.

மேலும் விபரங்களுக்கு இங்கே சொடுக்கவும்,

http://www.dcmsme.gov.in/office_memorandum_clarification_82017.pdf

14. பெரு தொழில் நிறுவனங்களின் துணை ஒதுக்கூடு பணியின் அளவு 20%

கொள்முதல் மதிப்பில் சேர்க்கப்படுமா?.

ஆம், பெரு தொழில் நிறுவனங்களால், குறு அல்லது சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் துணை ஒதுக்கூடு பணியின் அளவு 20% ஆண்டு மொத்த கொள்முதல் மதிப்பில் எடுத்து கொள்ளப்படும்.

15. தேசிய சிறு தொழில்கள் கழகத்தினால் உருவாக்கப்படும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் கூட்டமைப்புக்கு "பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012" பொருந்துமா?.

ஆம். தேசிய சிறு தொழில்கள் கழகத்தினால் உருவாக்கப்படும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் கூட்டமைப்புக்கு "பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012" பொருந்தும் அல்லது பயன் பெறலாம்.

16. "பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012"ன்படி குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ள சிறப்பு சலுகைகள்/பயன்கள் யாவை?.

(i) ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பம் (Tender Document) விலை இல்லாமல் வழங்கப்படும்.

(ii) பிணை வைப்புத்தொகை (EMD) கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

17. செக்யூரிட்டி டெபாசிட் வழங்குவதிலிருந்து ( Security Deposit) விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா?.

இல்லை. செக்யூரிட்டி டெபாசிட் ( Security Deposit) வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை.

18. பொது கொள்முதல் கொள்கை 2012 உத்தரவு மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் பொது துறை நிறுவனங்களுக்கு பொருந்துமா?.

பொருந்தாது. மாநில அரசுகள் இதை போன்று கொள்கைகளை சூழ்நிலைக்கேற்றவாறு உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

19. மத்திய அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கொள்முதல் விபரங்கள் தெரிந்துகொள்ளுவது எவ்வாறு?.

மத்திய அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கொள்முதல் விபரங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள வலைத்தளத்தில் காணலாம்.

https://sambandh.msme.gov.in/PPP_Index.aspx

20. பொது கொள்முதல் கொள்கை 2012 உத்தரவினால் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு கிடைக்கும் பயன்கள் யாவை?.

(i ) ஒப்பந்தப்புள்ளி படிவம் (Tender Document) விலை இல்லாமல் வழங்கப்படும்.

(ii ) முன் வைப்புத் தொகை (EMD ) அளிப்பதிலிருந்து விலக்கு.

(iii ) 15% விலை முன்னுரிமை (L1+15%).

(iv ) ஒப்பந்த பணிகளை பெறுவதருக்கு முன் அனுபவம் தேவை இல்லை.

(v ) கடைசி மூன்று ஆண்டு நிதி நிலை அறிக்கை அல்லது வரவு செலவு கணக்கு விபரம் சமர்பிக்கவேண்டியதில்லை.

மேலும் விபரங்களுக்கு இங்கே சொடுக்கவும் (Click Here),

http://dcmsme.gov.in/Office%20memorandom_10316.pdf

21. "அரசு கொள்முதலில் " பட்டியலின மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களின் பங்கேற்பினை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?.

அரசு கொள்முதலில் பட்டியலின மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்கு கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன,

(i) பழங்குடியின/பட்டியலின தொழில்முனைவோர்க்கென்று "சிறப்பு வாங்குவோர் மற்றும் விற்போர் கருத்தரங்கு" பொதுத்துறை நிறுவனஙகளால் நடத்தப்படும்.

(ii) தேசிய சிறு தொழில்கள் கழகத்தின் "கூட்டமைப்பு உருவாக்குதல்" திட்டத்தின் கீழ் பழங்குடியின/பட்டியலின தொழில்முனைவோர்க்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்படும்.

(iii) தேசிய சிறு தொழில்கள் கழகத்தின் " ஒற்றை புள்ளி பதிவு" திட்டத்தின் கீழ் சிறப்பு ஒற்றை ஒற்றை சாளர அமைப்பு திறக்கப்பட்டுள்ளது.

22. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனஙகளிடமிருந்து மட்டும் கொள்முதல் செய்வதற்கென்று " பொருட்கள் " அடங்கிய பட்டியல் ஏதும் உள்ளதா?.

ஆம், அனைத்து துறைகளும் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களும், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனஙகளிடமிருந்து மட்டும் கொள்முதல் செய்வதற்கென்று "358 பொருட்கள்" அடங்கிய பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு இங்கே சொடுக்கவும் :

http://www.dcmsme.gov.in/schemes/Listof358ItemsReserved.pdf

23. பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012 யை கண்காணிக்க மற்றும் ஆய்வு செய்வதற்கு குழு ஏதும் அமைக்கப்பட்டுள்ளதா?.

ஆம், செயலாளர் , குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்ககளின் அமைச்சகம் அவர்களின் தலைமையின் கீழ் பொது கொள்முதல் கொள்கை உத்தரவு 2012யை கண்காணிக்க மற்றும் ஆய்வு செய்வதற்கு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்குழுவானது,

(i) 25% கொள்முதல் இலக்கிலிருந்து விலகளிக்க மத்திய அமைச்சகங்கள் / துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து வரும் கோரிக்கையை ஒவ்வொன்றாக பரிசீலனை செய்தல்.

(ii) குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்து மட்டும் கொள்முதல் செய்வதற்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள 358 பொருட்களின் பட்டியலை ஆய்வு செய்தல்.

(iii) "அரசு கொள்முதல்" ( Government Procurement ) தொடர்பாக குறு மற்றும் சிறு தொழில்நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் குறை மற்றும் அரசு துறைகள்/ பொதுத்துறைகள் நிறுவனங்கள் கோரும் ஒப்பந்தபுள்ளியில் தேவையற்ற நிபந்தனைகளை விதிப்பது உள்ளிட்ட குறைகளை ஆய்வு செய்தல்.

(iv) மத்திய அமைச்சகங்கள் / துறைகள் , குறு மற்றும் சிறு தொழில் தொழில்நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யும் அளவினை அதிகரிப்பது தொடர்பான நடவடிக்கைகள் எடுத்தல்

உள்ளிட்ட ஆகிய பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

24. பொது கொள்முதல் கொள்கை 2012 உத்தரவு தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்வது எப்படி/எவ்வாறு?

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை / குறைகளை நிவர்த்தி செய்வதற்கு " குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தில் "குறை தீர்க்கும் மையம்" ஒன்று ஏற்படுத்தப்படும்/ஏற்படுத்தப்பட்டுள்ளது.

25. வணிகத்தின் பரிவர்த்தனை செலவைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(i) ஒப்பந்த புள்ளி விண்ணப்ப படிவம் விலை இல்லாமல் வழங்கப்படும்.

(ii) முன் வைப்பு தொகை (EMD )அளிப்பதிலிருந்து விலக்கு.

(iii) ஒப்பந்தபுள்ளி நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மைக்கு மின்னணு கொள்முதல் (E -Procurement ) கொண்டுவரப்படும்/ஏற்கப்படும்.

****************************************************************************************